கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:06.12.2023
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக ராய்ச்சூரில் உள்ள வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகத்துடன் கைகோர்ப்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தேவை மற்றும் எதிர்கால கல்வித்திட்டம், ஆராய்ச்சி மற்றும் விவசாய-வணிக நடவடிக்கைகள் மூலம் தேசிய மற்றும் சர்வதேச புகழ் பெற்ற நிறுவனம். அதே சமயம், வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகம், ராய்ச்சூர் வேளாண்மைக் கல்வியின் தேவைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள், விவசாயத் துறையின் வளர்ச்சி மற்றும் நிலைத் தன்மைக்கான ஆராய்ச்சிகள் மூலம் விவசாய சமூகம் எதிர் கொள்ளும் இன்னல்களுக்கு குறுகிய மற்றும் நீண்ட கால வழிகளைக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நிறுவப்பட்டது. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ராய்ச்சூரில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையே முதுகலை மாணவர்களின் ஆராய்ச்சியை எளிதாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.

முதுகலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான ஒப்பந்தத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன் மற்றும் ராய்ச்சூர் வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் எம்.வீரங்கவுடா ஆகியோர் கையெழுத்திட்டனர். முனைவர் வெ.கீதாலட்சுமி, துணைவேந்தர், முனைவர் ந.செந்தில், முதன்மையர் (முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம்), முனைவர் அ.ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்), முனைவர் எம்.சாந்தி, இயக்குநர் (தாவர பாதுகாப்பு ஆய்வுகள் மையம்), முனைவர் எம்.பாலகிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர் (உணவு செயல் முறை பொறியியல்) மற்றும் இரு நிறுவன அதிகாரிகளும் இணையவழி மூலம் கையெழுத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**